# தமிழர் பொருளியல்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 104 06.04.2025





## கோடையைக் குளிர்விக்கும் வத்தகை

## இலங்கை தேயிலையின்..

## நீங்களும் ஏற்றுமதியாளராகலாம்

**திரு. கதிர்காமபாலன் கனோஜன்**

பணிப்பாளர்

வடமாகாண ஏற்றுமதி அபிவிருத்தி சபை



# நீங்களும் ஏற்றுமதியாளராக விரும்புகிறீர்களா?



*யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடமாகாண ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கான தலைமை அலுவலகத்தில் காலை வேளையில் சுறுசுறுப்பாக தனது பணியில் ஈடுபட்டிருந்த வடக்கு மாகாண ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் **திரு. கதிர்காமபாலன் கனோஜன்** அவர்களை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நேரத்தின்படி அணுகி இருந்தோம். அன்றைய தனது தீவிரமான பணிக்கு இடையிலும் ஆரோக்கியமான வணக்கத்தோடு எங்களது கேள்விகளுக்கு பதில் தந்து கொண்டிருந்த பணிப்பாளரின் காலை வேளை உற்சாகம் எங்களையும் தொற்றிக் கொண்டது.*

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களது உற்பத்திகளை உலகம் முழுவதும் அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகளிலும் நாட்டுக்கான அந்நியச்செலவாணியை ஈட்டுவதிலும் தனது காத்திரமான பங்கை வகிக்கும்இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையானது,

- வர்த்தகம்
- கப்பல் போக்குவரத்து
- கைத்தொழில்
- மீன்பிடி
- பனைசார் உற்பத்திகள்
- தகவல் தொழினுட்பம்
- விவசாயம்
- கிராமிய கைத்தொழில்கள் போன்ற பல துறைகளுக்கு வழிகாட்டலும் ஆலோசனையும் வழங்குவதே இந்த சபையின் நோக்கமாக இருக்கின்றது. அத்துடன்,

1. ஏற்றுமதி விவசாயப் பிரிவு *(Export Agriculture Division)*
2. ஏற்றுமதிச் சேவைகள் பிரிவு *(Export Services Division)*
3. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு *Regional Development Division)*
4. கொள்கை மற்றும் திட்ட அமுலாக்கல் பிரிவு *( Policy and Planning Division )*
5. சந்தை விரிவாக்கல் பிரிவு *( Market Development Division).*
6. வணிக மேம்படுத்தல் மற்றும் வணிக தகவல் பிரிவு *(Trade Facilitation & Trade Information Division)*
7. கைத்தொழில் விரிவாக்கல் பிரிவு *(Industrial Products Division)*
8. தகவல் தொழில் நுட்பப் பிரிவு*( Information Technology Division)*
9. மனித வள அபிவிருத்திப் பிரிவு *( Human Resources Management Division)*
10. நிதிப் பிரிவு *( Finance Division)*

போன்ற பல்வேறுபட்ட பிரிவுகளாக இப்பொறுப்புகள் பிரிக்கப்பட்டும் இருக்கின்றன.




தற்போது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவுகளில் ஈடுபடுபவர்களுக்கு ஏற்படும் ஏற்றுமதி தொடர்பான கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் வடமாகாண ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர் திரு. கனோஜன் அவர்களை நேர் கண்டபோது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடமாகாண ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கான தலைமை அலுவலகத்தில் காலை வேளையில் சுறுசுறுப்பாக தனது பணியில் ஈடுபட்டிருந்தவரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நேரத்தின்படி அணுகி இருந்தோம். அன்றைய தனது தீவிரமான பணிக்கு இடையிலும் ஆரோக்கியமான வணக்கத்தோடு எங்களது கேள்விகளுக்கு பதில் தந்து கொண்டிருந்தார் வடக்கு மாகாணத்தின் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் திரு கனோஜன்அவர்கள்.

**கேள்வி:** சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களில் தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய முடியுமா? அப்படியாயின் அவர்கள் எவ்வாறான முன்னாயத்தங்களில் ஈடுபட வேண்டும்?

**பதில்:** ஆம் நிச்சயமாக, சிறு தொழில் முனைவோர்கள் தங்களது உற்பத்திகளை நிச்சயமாக ஏற்றுமதி செய்ய முடியும் அதற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் நாங்கள் வழங்குகிறோம். அதற்காக நாங்கள் பல வழிகாட்டல் கருத்தமர்வுகளையும் நடத்திக் கொண்டிருக்கிறோம். வடமாகாண தொழில் முயற்சியாளர்களுக்கு என்று ஒரு புலனக்குழுமம் *(whatsApp)* இருக்கிறது. தொழில் முனைவோர்களுக்கு தேவையான பல கருத்து பரிமாற்றங்கள் அங்கே நடைபெறுகிறது. ஏற்றுமதி தொடர்பான எந்த கேள்விகள் என்றாலும் தொழில் முயற்சியாளர்கள் எந்த தயக்கமும் இல்லாமல் எங்களை தொடர்பு கொள்ள முடியும் என்று சொல்கிறார் வட மாகாண ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர்.

ஏற்றுமதி செய்வதற்கு எப்படி பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி மிகவும் தெளிவாகவும் எல்லோருக்கும் விளங்கக்கூடிய வகையிலும் பதில் தந்து கொண்டிருந்தார். தனது உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய விரும்புகிறவர்கள் முதலாவது தமது பிரதேசத்தில் உள்ள பிரதே சபை, நகர சபை, மாநகர சபை என்று தங்களது வாரியத்திற்கு உட்பட்ட சபைகளில் முதல் பதிவினை செய்திருக்க வேண்டும் இது மிகவும் கட்டாயமான ஒன்றாக இருக்கின்றது. தொழில் செய்யப்படுகின்ற அந்தப் பிரதேசத்தில் தனது முதல் பதிவை மேற்கொண்டவர் பிரதேச செயலகத்தில் தனது வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லாதவிடத்து தனியார் கம்பெனி பதிவாளர்களிடம் தமது வியாபார பதிவினை மேற்கொள்ள முடியும்.

இந்த ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தியான பின்பு தான் மேலதிக பதிவுகளுக்காக அவர்கள் ஆயத்தப்படவேண்டும்.

இரண்டாவது கட்டமாக உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தில் உங்களது

- தேசிய அடையாள அட்டை
- மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழ்

என்பவற்றை வழங்கி *TIN* நம்பர் ஒன்றினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது கட்டமாக அதே உள்நாட்டு இறைவரி திணைக்கள அலுவலகத்தில்

- தேசிய அடையாள அட்டை
- வியாபார பதிவு சான்றிதழ்
- வரி அடையாள எண் *(TIN)*

என்பனவற்றோடு நாங்கள் உற்பத்தி செய்யப் போகும் பொருட்களை வெளிநாடு ஒன்றில் கொள்வனவு செய்ய இருப்பவரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் *(proforma invoice)* ஒன்றினையும் சமர்ப்பிக்க வேண்டும். இதன்மூலமாக ஏற்றுமதிக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதான நம்பகத்தன்மையை இறை வரித் திணைக்களத்துக்கு ஏற்படுத்துகின்றோம்.




முக்கியமான நான்காவது கட்டத்திற்குள் நுழைகின்றோம்

இறுதியாக சுங்கத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். இந்த பதிவினை மேற கொள்வதற்கும் சுங்கதிணைக்களத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நான் இலங்கையில் அங்கீகரிக்கப்படாத பொருட்களையோ அல்லது தேசிய மரபுரிமை பொருட்களையோ ஏற்றுமதி செய்ய போவதில்லை என்றும் அந்நிய செலவாணியை நாட்டிற்கு ஈட்டிக் கொடுப்பேன் என்பது போன்ற பிரகடனப் பதிவு ஒன்றினை மேற்கொள்ள வேண்டும். அதற்காக மேற்குறிப்பிட்டவாறு உங்களுடைய

- தேசிய அடையாள அட்டை
- வியாபார பதிவு சான்றிதழ்
- வரி அடையாள எண் *(TIN)*
- கொள்வனவாளரின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்*(proforma invoice)*

போன்ற ஆவணங்களை கையளிக்க வேண்டும். சுங்கத் திணைக்களத்தின் பதிவிற்காக நீங்கள் அதற்காக இணைய வழியூடாகவோ அல்லது கொழும்பு நகரத்தில் அமைந்துள்ள அவர்களது தலைமைச் செயலகத்துக்கோ செல்ல வேண்டும். அங்கே 18 வகையானசான்றிதழ் பதிவுகளை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டி இருக்கும். அவையாவன,

- *GS* படிவம் 01
- கிராமஅலுவலர் அல்லது மற்றும் பிரதேச சேவையாளரின் உறுதிப்படுத்தல் கடிதம்
- பாஸ்போர்ட் அளவு புகைப்படம்
- மாதிரி கையொப்பம்
- *NIC* முன் பக்கம்
- *NIC* பின் பக்கம்
- சேவை வழங்குநரிடமிருந்து மொபைல் எண் உரிமை உறுதிப்படுத்தல்
- *Gs* படிவம்2
- வணிகப் பதிவுச் சான்றிதழ்
- *TIN* சான்றிதழ்
- *VAT* சான்றிதழ்
- படிவம் 1/40
- முழுமையான உரிமையாளரிடமிருந்து ஒப்புதல்
- உறுதி அல்லது வாடகை ஒப்பந்தம்
- தொடக்கநிலை ஒப்பந்தத்தின் நகல்
- *CEB/LECO* மின்சார பில் (நிறுவனம்)
- கூகிள் ஸ்ட்ரீட் வியூ மூலம் வளாகத்தின் முன் உயரம்
- இருப்பிட வரைபடம் – கூகிள் வரை பாதை போன்ற விபரங்களை நீங்கள் கைவசம் வைத்திருக்கும் பொழுது இலகுவாக உங்களுடைய பதிவுகளை மேற்கொள்ள முடியும்.




இவ்வாறாக சிறிய அல்லது நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தன்னுடைய ஏற்றுமதி அபிவிருத்திக்கு தன்னை தயார்படுத்தும் பொழுது இவ் நான்கு பதிவுகளை நிச்சயமாக மேற்கொள்ள வேண்டும்.

- வியாபார பதிவு சான்றிதழ்

- வரி அடையாள எண் *(TIN)*
- வரி சான்றிதழ்
- சுங்கவரி திணைக்கள சான்றிதழ்


இவ்வாறான முக்கியமான நான்கு பதிவுகளையும் மேற்கொள்வதற்கு நான்கு அரச திணைக் களங்களின்சேவைகளை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டி இருக்கிறது

- பிரதேச சபை /நகரசபை /மாநகரசபை
- பிரதேச செயலகம்
- உள்நாட்டு இறைவரி திணைக்களம்
- சுங்கத் திணைக் களம்

போன்ற அரச திணைக்களங்களில் சரியான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்கு வதற்குரிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த தயக்கமும் இல்லாமல் நீங்கள் சரியான முறைப்படி அவர்களை அணுக முடியும் என்று கூறுகிறார்.

**கேள்வி:** தொழில் முயற்சியாளர்கள் பதிவுகளை மேற்கொள்வதற்கு வேண்டிய விவரங்களை கூறியிருக்கிறீர்கள் இது தவிர வேறு ஏதாவது நியமங்கள் இருக்கிறதா?

**பதில்:** ஆம் இது தவிர நாங்கள் சில வகையான பொருட்களை ஏற்றுமதி செய்யும் பொழுது தொடர்பு பட்டதிணைக்களங்களில் அனுமதி பெற வேண்டி இருக்கிறது உதாரணமாக தெங்கு சம்பந்தப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்யும் பொழுது தெங்கு அதிகார சபையிலும் கடல் உணவுகளை ஏற்றுமதி செய்யும் பொழுது மீன்பிடித் திணைக்களத்திலும் பனை சார்ந்த பொருட்களை ஏற்றுமதி செய்யும் பொழுது பனை அபிவிருத்தி சபையிலும் என்று பல்வேறு பட்ட பொருட்களுக்கு சில வரைமுறைகள் உள்ளன. இதைவிட நாங்கள் பழங்கள் அல்லது மரக்கறிகள் ஏற்றுமதி செய்யப் போகிறோம் என்று சொன்னால் மத்திய அரசாங்கத்துக்கு கீழே செயல்படும் விவசாயதிணைக்களத்தின் ஊடக பெறப்படும் பதிவுகள் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.





**கேள்வி:** கம்பெனி சட்டத்துக்கு கீழ் பதிவு செய்யப்படும் வியாபார நிறுவனங்கள் தங்களுடைய உணவுப் பொருட்களுக்கான தரச் சான்றிதழ்களை எப்படி பெற்றுக்கொள்ள வேண்டும்?

**பதில்:** கம்பெனி பதிவுகள் என்பது வியாபாரத்தை நடாத்துவதற்கான ஒரு உரிமம் மாத்திரமே. அவர்கள் தங்களது உற்பத்திகளை உற்பத்திகளுக்கான தரச் சான்றிதழ்களை பெறுவதற்கு தத்தமது பிரதேசத்தில் உள்ள சுகாதார பரிசோதகரை அணுக வேண்டும். கம்பெனி பதிவிற்கு கீழே வியாபார பதிவு செய்யப்பட்டிருந்தாலும் தமது பிரதேசத்தில் உள்ள பிரதேச சபை பிரதேச செயலகம் சுகாதார பரிசோதகர் என்போருடனான நல்லுறவு அவர்களுடைய வியாபாரத்துக்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**கேள்வி:** சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் ஏற்றுமதி செய்வதற்காக *Good Manufacturing Practice-* சிறந்த உற்பத்தி நடைமுறைகள் *(GMP)* அல்லது வேறு தரப்படுத்தல் கம்பெனிகளின் சான்றிதழ்கள் *(Sri Lanka Standards Institution (SLSI) and SGS SA.)* போன்ற தரச்சான்றிதழ்களை கட்டாயமாக பெற்றிருக்க வேண்டுமா?

**பதில்:** தன்னுடைய உற்பத்திகளை ஏற்றுமதி செய்ய விரும்புகின்ற ஒருவர் இத்தகைய தரச் சான்றிதழ்களை பெற்று வைத்திருப்பது தன்னுடைய உற்பத்தி மீதான நம்பிக்கையை கொள்வனவாளர்களுக்கு வழங்குகிறார். ஆனால் ஏற்றுமதி செய்வதற்கு இத்தகைய தர சான்றிதழ்கள் முக்கியமானவை என்று சொல்வதற்கில்லை.

**கேள்வி:** உள்ளூர் முயற்சியாளர்களுக்கு, ஏற்றுமதி அபிவிருத்தி பிரிவு ஏற்றுமதிக்கு எவ்வாறான வழிகாட்டல்களை வழங்குகின்றது?

**பதில்:** பிரதேச மட்டத்தில் தனது வியாபாரத்தை பதிவு செய்த ஒருவருக்கு ஏற்றுமதிக்கான ஆரம்ப முதல் இறுதி வரைக்குமான சகல வழிகாட்டல்களையும் நாங்கள் வழங்குகின்றோம்.

- பொருட்களை உற்பத்தி செய்வது
- தரகட்டுப்பாட்டு நிர்ணயங்களை விளங்கிக் கொள்வது
- பொதி செய்வது
- விற்பனையாளரை கண்டுபிடிப்பது
- கொள்வனவாளர் உடனான நட்புறவை பேணுவது
- தனது பொருளுக்கான விலைமதிப்பீடுகளை உருவாக்குவது
- வியாபாரத்தில் வரவு செலவுத் திட்டங்களை உருவாக்குவது

போன்ற பல்வேறுபட்ட வழிகாட்டல்களை செய்து வருகிறோம். குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு பல ஏற்றுமதியாளர்களுக்கான தேசிய சந்தை வாய்ப்புகளை உருவாக்குகிறோம் அண்மையிலும் எமது ஏற்றுமதியாளர்களை வெளிநாட்டு வணிக சந்தைகளுக்கு அனுப்பி இருக்கிறோம். **"ஒரு ஏற்றுமதியாளருக்கு தேவையான சகலவிதமான வழிகாட்டல்களும் நெறிப்படுத்தல்களும் இங்கே கிடைக்கும். தயக்கமில்லாமல் எங்களை அணுகலாம்"** என்று மிகத் தெளிவாகவும் நம்பிக்கையோடும் உரையாடிய வட மாகாணத்தின் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் திரு. கனோஜன் அவர்களின் உற்சாகம் எங்களையும் தொற்றிக்கொள்ள நன்றிகூறி அவரிடமிருந்து விடை பெற்றோம்.

நேர்கண்டவர்
ஞா.கவினி

# தமிழரின் பொருளாதாரத்தை கசிப்பைக் கொண்டு கட்டுப்படுத்தும் நடவடிக்கையா?

கிழக்கு மண்ணில் பாலும் தேனும், மீன்வளமும் இறைச்சி வகைகளும், மரக்கறிகளும், என பொன் விளையும் மண்ணின் மகத்துவம் இன்னுமின்னும் குன்றிவிடும் அல்லவா சட்டவிரோத கசிப்பு உற்பத்திகளை முற்றாக நிறுத்துவதற்கும், அது தொடர்பான விற்பனைகளுக்கு முற்றுப் பற்றி வைத்து தமிழர்கள் பொருளாதார ரீதியில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு வழிசமைத்துக் கொடுப்பதற்கு அனைவசரும் உடன் முன்வரவேண்டும் என்பதுவே அனைவரின் அவாவாகும்.



“கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்”

விளைபொருள் கொடுத்து கள்ளுண்டு தன் உடம்பைத் தான் அறியாத நிலையை மேற்கொள்ளுதல், செய்வது இன்னதென்று அறியாத அறியாமை உடையதாகும். ஏன திருவள்ளுவர் மிகவும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இவ்வாறு ஆன்றோர் வாக்குகளையோ, கருத்துக்களையோ அல்லது நன்நெறிகளையோ சமய அறக் கருத்துக் களையோ யாவரும் கடைப்பிடிக்கும் பட்சத்தில் வீண் பிரச்சனைகளையும். வீணான செலவுகளையும் தவிர்த்து தாமும் தமது குடும்பமும், தமது சமூகம் என ஆரோக்கிய வாழ்வு வாழலாம்.

எனினும் தற்காலத்தில் சட்டவிரோத மது பாவகைளும், சட்டவிரோத போதைப் பொருட் பாவனைகளும், நாட்டில் எங்கும் வியாப்பித்துள்ளன எனலாம். அதுபோல் மட்டக்களப்பு மாவட்டத்திலும் இவ்வாறு சட்டவிரோதமான மதுபாவனைகளும், போதைப் பொருட்களும் ஆங்காங்கே காணப்படு வதாக பொலிஸ் தகவல்களும். அது தொடர்பில் கடமை யாற்றுகின்ற அரச நிருவாகத்தினரது கருத்துக்களி லிருந்தும் தெயவருகின்றன. அரச அங்கீகாரத்துடன் மதுபானக்கடைகள் காணப்படுகின்ற போதிலும், அவற்றின் விலை அதிகம் என்பதனால் சட்டவிரோத மாக தாமாகவே மதுசாரத்தை உற்பத்தி செய்து பாவனைக்கு விடும் கும்பலும் மட்டக்களப்பு மாவட்டத் திலே காணப்பகின்றன.

அந்த வகையில்.. மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலை பொலிஸ் பிரிவில் பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொலிசாரினால் அண்மையில் முற்றுகையிடப்பட்டிருந்தது. இதன்போது 23 பரல்களில் 15 இலட்சம் மில்லி லிட்டர் கோடா, 5,25,000 லிட்டர் கசிப்பு, என்பன கைப்பற்றப்பட்டிருந்தன. மட்டக்களப்பு கொட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண் முனை பிரதேச வாவியை அண்மித்த அடர்ந்த காட்டுப் பகுதியில் நீண்ட நாட்களாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் சுற்றிவளைத்திருந்தனர்.

சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போதே இவ்வாறு கசிப்பு உற்பத்தி நிலையத்தில் கசிப்பு உற்பத்திக்கான பயன்படுத்தப்பட்ட பெருமளவிலான உபகரணங்களும் பரல்கள், போத்தல்கள் கலன்கள் என்பனவும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டிருந்தன. கொக்கட்டிச்சோலை பொலிசாரின் தேடுதல் வேட்டை யில் 06 பரல் கசிப்பு, கோடா மீட்பு. இது இவ்வாறு இருக்க அதே கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் மேலுமொரு பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் பொலி சாரினால் முற்றுகையிடப்பட்டு அதன்போது 06 பரல் களில், கோடா, கசிப்பு போன்றவற்றையும் கடந்த 21.03.2025 அன்று கைப்பற்றியிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உட்பட்ட மட்டக்களப்பு வாவியை அண்மித்த அடர்ந்த காட்டுப் பகுதியில் நீண்ட நாட்களாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையமே இவ்வாறு முற்றுகையிடப்பட்டிருந்தது. இது இவ்வாறு இருக்க மட்டக்களப்பு மாவட்டத்தின் இவை ஒரு சில உதாரணங்கள் மாத்திரமே! மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களிலும், அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும், நீர்

நிலைகளை அண்மித்த சதுப்புநிலப் பகுதிகளிலும், இவ்வாறு சட்டவிரோத மதுபாவனை உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதோடு, அவற்றை மிகவும் சூட்சும மான முறையில் கிராமங்களுக்குள் விற்பனை செய்யப்பட்டும் வரப்படுகின்றன.

அதபோன்று போதை மாத்திரைகளும், இளம் பராயத்தினரையும், பாடசாலை மாணவர்களையும் மையப்படுத்தியதாக வினியோகிக்கப்படுவதாகவும் தகவர்கள் வெளிவந்தவண்ணமேயுள்ளன. இவ்வாறு சட்டவிரோத மதுசார உற்பத்திகளையும், விற்பனை களையும், போதைமாத்திரைகளையும் வினியோகிக் கும் கும்பலை அவ்வப்போது பொலிசாரும், துறைசார் தோரும் கைது செய்தாலும் இச்செயற்பாடுகள் தொடர்ந்தவண்ணமேயுள்ளன. மட்டக்களப்பு மாவட் டம் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் 345 கிராம உத்தியோகஸ்த்தர் பிரிவுகளையும் உள்ளடக்கிய மாவட்டமாகும் 12 மேற்பட்ட பொலிஸ் நிலையங்களையும், கொண்டமைந்து காணப் படுகின்ற இந்நிலையில் சட்டவிரோத மதுசார நவடிக் கைகளை தொடர்பில் கடமையாற்றுகின்ற அரச உத்தியோகஸ்த்தர்களும் கடமையிலீடுபடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டில் மாத்திரம் பொலிஸ், மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு, மற்றும் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் 5891 சந்தேக நபர்களுக்கு எதிராக 5969 வழக்குகள் சட்டவிரோத மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. போதைவஸ்த்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு விழிப்புணர்வுகளும், வழங்கப்பட்டு வரப்படுவதோடு, துண்டுப்பிரசுரங்கள் வினியோ கித்தல், உளவள ஆலோசனை வழங்குதல், இவற் றிற்கு மேலாக கந்தக்காடு, சேனபுர, பூந்தோட்டம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள புனர்வாழ்வு முகாம்களில் தங்கியிருந்து சிகிச்சை வழங்கப் பட்டு அங்கு அவர்களுக்கு தேவையான தொழிற் பயிற்சிகளும் வழங்கப்பட்டும் வரப்படுகின்றன. அத்தோடு மாவட்டத் திலுள்ள 14 பிரதேச செயலகங் களிலும் கடமையாற்றும் அரச உத்தியோகஸ்தர்கள் ஊடாகவும், கிராமங்கள் தோறும் இவ்வாறான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக **மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இயங்கி வருகின்ற போதைப்பொருள் முற்தடுப்பு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

சட்டவிரோத மதுபாவனைகளும், போதை வஸ்த்து பாவனைகளும் இவ்வாறு இருக்கின்ற இந்நிலையில்..மதுசார பாவனை காரணமாக



நாளொன்றுக்கு எமது நாட்டில் 40 தொடக்கம் 50 பேர் அதாவது வருடத்திற்கு 15,000 பேர் அனியாயமாக பலியாகின்றனர்.

பியர் மற்றும் சாராய கம்பெனிகள் ஒரு நாளைக்கு 60 கோடி வருமானம் மீட்டுகின்றனர். இந்தத் தொகையை நாளாந்தம் ஈட்டிக் கொள்வதற்காக அதாவது மதுசார கம்பனிகளுக்கு நாளாந்தம் இழந்து வருகின்ற வாடிக்கையாளர்களுக்கு பதிலாக புதியவர்களை பியர் சாராயப் பாவனைகளுக்காக பழக்கப்படுத்துதல் வேண்டும் உங்களுடைய பிள்ளையும் அவர்களின் இலக்காகும்.

2006 ஆம் இலக்க 26 இன் புகையிலை மற்றும் மதுசார மீதான தேசிய அதிகார சபை சட்டத்திற்கு ஏற்ப நாட்டின் மதுசார பிரச்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் பியர் மற்றும் சாராய கம்பனிகளின் முறைகேடாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்காகக் கொண்டு பிரச்சாரம் மேற்கொள்கின்றனர். சிறுவர்கள் மட்டும் இளைஞர் யுவதிகள் விரும்புகின்ற நடிகர் நடிகைகள் மதுசாரம் அருந்துவதற்காக காட்டுகின்றனர். சமூக ஊடகங்களில் பிரச்சாரங்களையும் அறிவித்தல்களையும் வெளியிடு கின்றனர். சிறிய பிள்ளைகள் பார்க்கின்ற காட்டுன் களில்கூட மதுசார பாவங்களுக்கான பிரச்சார சந்தர்ப் பங்கள் உள்ளன. தொலைக்காட்சி நாடகங்கள் திரைப்படங்களில் மதுசாரப் பாவணையை கவர்ச்சி கரமாக காட்டப்படுகின்றன. மதுசார பாவனையில் உண்மைக்கு புறமான விடயங்களை தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்யப்படுகின்றன.

மதுசார நிறுவனங்கள் காண்பிக்க இன்னும் சில பொய்யான விடயங்களும் அமைகின்றன.

அவற்றுள் கவலை, பிரச்சனை, ஏற்படுகின்ற போது சாராயம் அல்லது பியர் குடிப்பதாக காட்டுதல். வைப்பவம் அல்லது நிகழ்வு ஒன்றிற்காக சாராயம் அல்லது பியர் தேவை என காண்பித்தல். தற்காலத்தில் பெண்களும் மதுசாரம் பாவிப்பதாக காண்பித்தல். மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் மதுசாரப் பாவனை

செய்ய வேண்டும் என்று காண்பித்தல். பணம் செலுத்தி மதுசார பாவனை நன்மைகளைப் பற்றிய அறிவித்தல்களை வெளியிகின்றனர்.

### மதுசார கம்பெனியிடமிருந்து பிள்ளைகளை பாது காத்துக் கொள்வதற்காக நான் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள்

பல்வேறு வகையான சிறுவர் மற்றும் இளைஞர் யுவதிகளை இலக்காகக் கொண்ட பிரச்சாரங்களை இனம் கண்டு அவற்றுக்கு எதிரான சிறுவர்களிடம் எதிர்ப்பு சக்திகளை உருவாக்குதல். மதுசார கம்பனிகள் எங்களை ஏமாற்றுவதற்கா என்பதை சிறுவர்களுக்கு எடுத்துச் செல்லுதல். அவ்வாறான பிரசார உத்திகள் இனங்காண்பதற்காக பிள்ளைகளை பழக்குல் வேண்டும். இனம் கண்ட இவ்வாறான உத்திகளின் பலத்தை குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய விடயங்களை சொல்லிக்கொடுத்தல். சிறுவர்களை இலக்காகக் கொண்ட மதுசாரப் பிரச்சாரங்களின் ஆதிக்கத்தை குறைப்பதற்காக செயல்படுதல். சாராய கம்பெனிகளின் நன்மைகள் கிடைக்கும் தீர்மானங்களை மேற்கொள்கின்ற அல்லது அதற்காக வேண்டி உதவி செய்கின்ற அரசியல் வாதிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தல் மற்றும் அவ்வாறான அரசியல்வாதிகளை தோற்கடித்தல்.

### மதுசாரக் கம்பெனிகளின் நடத்தைகள்

இழந்து வருகின்ற வாடிக்கையாளர்களுக்கு பதிலாக சிறுவர்கள் இளைஞர்களை இலக்காகக் கொண்டு பிரசாரங்களை மேற்கொள்ளுதல். நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதும் தங்களுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியதுமான அமையும் கொள்கலன்களை உருவாக்குவதற்கு இடம்மளிக் காமை. நாட்டுத் தீர்மானங்கள் மேற் கொள்ளும் குழுவினர் ஊடகங்களை தங்கள் பக்கம் இழுத்துக் கொள்தல். நாட்டில் உள்ள சட்டத்திற்கு ஏற்ப நேரடியாக பிரச்சாரம் செய்ய இயலாத போதிலும் முறைகேடான மறைமுகமான பிரசார யுத்திகளை மேற்கொள்ளல். நாட்டிலுள்ள சட்டதிட்டங்களை மாறுகின்ற வகையில் வைபவங்கள் மட்றும் பல்வேறு விதமான நிகழ்வு களை மேற்கொள்வதற்காக அவர்கள் அனுசரணை வழங்குதல். பிழையான தகவல்களை வழங்குவதன்



மூலம் மதுசரப் பவனையை அதிகரிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவிக்கின்றது.

இதேவேளை சிகரட் நாள் ஒன்றிற்கு 60 இலங்கையர்களை கொலை செய்யும். புகைப்பவர்கள் இருவரில் ஒருவருக்கு அகால மரணத்தை ஏற்படுத்தும். புகைப்பவர்கள் போகப்போக அவலட்சணமாக மாற றப்படுவார்கள். புகைப்பவர்களுக்கு பாலியல் பல வீனத்தை ஏற்படுத்தும். சுவாசநோய், இருதயநோய், போன்ற பல நோய்கள் அதிகரிக்கும். புகைப்பவர்கள் மாத்திரமின்றி அருகிலிருப்பவர்களும், கருவிலிருக் கும் குழந்தைகளைக்கூட இது பாதிக்கும். இலங்கை யர்கள் கஸ்றப்பட்டு உழைக்கும் பணத்தை சுரண்டி அமெரிக்காவையும் பிரித்தானியாவையும் பணக்காரராகும் பொருள் இதுவே என புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபை தெரிவிக்கின்றது.

தமிழர்களின் பொருளாதாரத்தை குழி தோண்டிப் புதைப்பதற்காக திரைமறைவில் கசிப்பு உற்பத்தியிலும், விற்பனையிலும் யாரோ செயற்படு கின்றார்களா எனவும், எண்ணத் தோனுவதோடு, அதுதொடர்பிலும், சற்று ஆராயவேண்டிய நிலமையும் உள்ளது. இவ்வாறான நிலையில் தொடர்கதையாக மாவட்டத்தின் நிலமை சொன்றுகொண்டிருக்கின்றமை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு வலுவான தண்டனை வழங்கவும், சட்டங்களை இறுக்கமாக கடைப்பிடிக்கவும், அல்லது புதிய சட்டங் களை உருவாக்குவதற்கும் துசார்ந்தோரும், மக்கள் பிரதிநிதிகளும் முன்வரவேண்டும்.

கிழக்கு மண்ணில் பாலும் தேனும், மீன் வளமும் இறைச்சி வகைகளும், மரக்கறிகளும், என பொன் விளையும் மண்ணின் மகத்துவம் இன்னு மின்னும் குன்றிவிடும் அல்லவா சட்டவிரோத கசிப்பு உற்றிபத்திகளை முற்றாக நிறுத்துவதற்கும், அது தொடர்பான விற்பனைகளுக்கு முற்றுப் பற்றி வைத்து தமிழர்கள் தொருளாதார ரீதியில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு சழிசமைத்துக் கொடுக்கப்பதற்கு அனை வசரும் உடன் முன்வரவேண்டும் என்பதுவே அனைவரின் அவாவாகும்.



வ.சக்தி
சமூக ஆய்வாளர்





# பார்வை

அவசர அவசரமாக பொருட்களை எண்ணி எடுத்து தனது பையில் போட்டவாறே மலர் 'என்னஇது வெந்தயச்சரை சின்னதா இருக்கு நான் அரைக்கி லோதானே கேட்டனான் விலையும் சரியாத்தானே இருக்கு'என நினைத்து, சாமான்களை கட்டிய கடைப் பெடியனிடம் "தம்பி... இது எவ்வளவு" என்று கேட்டாள். "காக்கிலோ" என்றான். மலருக்கு எரிச்சல் வந்துவிட்டது ஏண்டாப்பா பில்லில இருக்கிறத கட்டினா என்ன காசையெண்டாலும் பாக்கிறதில்லயே என அதட்டினாள். சனம் முண்டியடித்துக்கொண்டு நின்றதால் கவனனிக்காம விட்டிட்டன் என்று சொல்லுவான் என நினைக்க, அவன்' குறைந்தபட்சம் சொறி கூட சொல்லாமல் வெந்தயச்சரையை எடுத்து வாளியில் கொட்டிவிட்டு வேறு ஒன்றைக்கட்டினான். விட்டிருந்தால் எழுபத்தைந்து ரூபா நட்டம். மலரெண்டா சும்மாயில்லை காலையில் எழுந்து ஒவ்வொரு தென்னைமரமாக அண்ணாந்து பார்த்து ஒரு பெருமூச்சு விட்டாள். போனவரியம் எவ்வளவு பூவும் பிஞ்சுமாக்கிடந்தது. இந்த வரிசம் ஏன் பாளையெல்லாம் விளக்குமாறு விரிச்சது போல விரிஞ்சு கிடக்கு. 'ஆழக்குழி வெட்டி அதில ஒரு முட்டையிட்டு அண்ணாந்து பாத்தா தொண்ணூறு முட்டை'ஒரே நொடிதான் விடை ரெண்டு. ரெண்டும் பொருந்தும் ஒன்று பாக்குமரம். இதை கமுகமரம் என்றுதான் சொல்ல வேண்டும். மற்றது தென்னை மரம். இப்ப பார்த்தா தொண்ணூறு முட்டை எங்க தென்னைக்கு கீழ நின்று அண்ணாந்து பாத்தா வெள்ளை வெளேரெண்டு ஓலை முழுக்க பூசணமாக்கிடக்கு ஓலைக்கு மேலை கறுப்பா ஏதோ பிசின் போல படர்ந்து கிடக்கு. இதுதான் தென்னைமரங்கள' காய்க்காம போனதுக்கு காரணமாம். ஊர் முழுக்க இதே நோய்தான். இந்த காத்துக்காலம் வரப்போகுது . வைகாசி பிறந்தா தேங்காய் மலியும். என்ன காத்துக்கு தேங்கா முத்துறது என்று சொல்லுவார்கள். இப்ப.. சும்மாவே தேங்காய் குடுக்கிற காலம், தேங்காயின்ர விலை கற்பனைக்கெட்டாத அளவில போயிற்றுது.

பனை தென்னை வள அபிவிருத்தி சபை, கமநல சேவை நிலையம், இன்னும் அறுவத்தெட்டு அபிவிருத்தி திட்டங்களும் அதைநிறைவேற்ற வெண்டே பட்டங்கள் பெற்ற அதிகாரியளும் இருக் கினம்தான். அவைக்கு உதுகள் கண்ணில படுகிற தில்லை. கடைசியா மரமும் காஞ்சபிறகாகிலும் வந்து பாப்பினமோ தெரியாது. ஒரு திட்டக்கிராமத்தில கமநல சேவைக்காறர் மானியம் என்று சொல்லி தென்னம்பிள்ளை கொடுத்தார்களாம். அந்தச்சனமும். குடிக்கவெண்டு விடுற குளோறின் தண்ணிய ஊத்தினா மரம் கெட்டுப்போகும். என்று கருதி, கொஞ்சம் தூரவா உள்ள மோட்டையில் போய் தண்ணி சுமந்து வந்து கோடையில கவனிச்சு மாரியிலும் மாடுகன்று மேயாம பாத்து வளத்தா ஆறுவரியம் முடிஞ்சாப்பிறகு பாளை வந்திட்டுதாம். "என்ன பாளைவந்திட்டுதாம்", எங்கட சனம் பரம்பரை பழக்கத்தை விடாம தென்னைக்கு பலகாரம் சுட்டு படைச்சு கூறை கட்டி பொங்கல் வச்சு கொண்டாடியாச்சு. அவ்வளவுதான் ஒவ்வொரு பாளையும் ஒருகாய் ரெண்டுகாய் அதுக்கு மேல காச்சா சாதியால தள்ளி வச்சிருவினம்' என்ற பயத்தில தேறிப்போய் நிக்கிது.

போய் கமநல உத்தியோகத்தர கேட்டா... “அது இளந்தென்னையில நெத்து எடுத்த பிள்ளை போல அவ்வளவா காய்க்காது. எப்பவும் நாற்று விடுற தேங்காய் ஒரு நாப்பது ஐம்பது வருசஞ் சென்ற மரமா இருக்கோணும்’ என்றாரே பார்க்கலாம் அவரது விவசாய அறிவை மெச்சுகிற அளவில சனம் இல்லை. “அதை நீங்கள்தானே தந்த நீங்கள்” என்றார் ஒருவர். “அப்படியே நான் இப்ப மூன்று மாதமாகத்தான் வேலை செய்யிறன். அது எனக்கு முதல் இருந்தவர் தந்திருக்கிறார்.” கேள்விகள் பயனற்றவையாகிப்போனதுடன் அந்தமக்கள் ஆறு வருடங்களாக பட்ட கஸ்டமும் வீணாகிப்போனது ‘இனி இந்த மரங்களை வெட்டி எறிந்துவிட்டு புதிதாக நடுங்கள் வேற ஒண்டும் செய்ய ஏலாது’ மலர் புத்திசாலித்தனமா மரம் அப்படியே நிற்க இடைகளில் மாமரங்களை நட்டுவிட்டாள்.

இரண்டொரு தேசிமரமும் நட்டதால் அவை காய்க்கும் நிலையை பெற்று அவளைக்காப்பாற்றி விட்டது. கிராமத்துப் பொருளாதாரம் பெண்களின் கைகளில்தான் இருக்கிறது என்ற கருத்து பூரணியுடையது. கோவிலில் அன்னதானத்திற்கு சமைக்கும் போது வெட்டிக்கழிக்கின்ற மரக்கறி, அரிசி கழுவுகிற தண்ணீர், திருவிப்பிழிகிற சக்கைதேங்காய்ப்பூ எல்லாம் மலருடைய வீட்டிற்குப் போய்விடும். அன்னதானத்தில் மட்டுமல்ல எங்கே விசேடம் என்றாலும் அங்கே அவள் இந்த மீதிகளை சேகரிப்பாள். அவற்றை உண்ண இரண்டு ஆடுகளும் பத்துப்பதினைந்து கோழிகளும் உண்டு. ஆனாலும் அன்னதானம் கொடுக்கும் பந்தியிலும் ஒரு பையை கூடவே வைத்து அதிலும் சோறு வாங்கு வாள். அது அவளுடைய காவல் நாய்க்கு. அப்படி ஆச்சரியப்படாதீர்கள் அந்த நாய் மரக்கறி சாப்பாடு சாப்பிடவே மாட்டாது ஆனால் அதன்மீது இரண்டு முட்டைகளை ஊற்றி அதை சாப்பிட வைப்பதில் அவள் வெற்றி காண்பாள்.

மலர் வீட்டோடு ஒரு சின்னகடையையும் நடத்தினாள். ஆங்கே அவளது தோட்ட வருமானங்கள் உண்டு. தேங்காயில் பெறும் தேங்காய்நெய், முட்டை, தேங்காய், வெற்றிலை பாக்கு. இடைக்கிடை வாழைக்குலை பழம் காய் இரண்டும், பழக்காலங்களில் மாம்பழம் பலாப்பழம் என்பவையும் சேரும். இவற்றில் எல்லாமே விற்பனை செய்யப்படுவதில்லை. அயல்வீடுகளுக்கு கொஞ்சம் அன்பளிப்பாகவும் போகும் . பதிலுக்கு அவர்களிடமிருந்தும் இவருக்கு பொருட்கள் வரும். இவர்களில் பத்துப்பேர் சேர்ந்து ஒரு சீட்டுப் பிடிப்பார்கள். அதில் நூறு ரூபா காசும் இரண்டு கிலோ சீனியும் நான்கு கிலோ அரிசியும் கட்டும் தொகையாகும். ஒருவருக்கு சீட்டு கிடைக்கும்போது நாற்பது கிலோ அரிசியும் இருவதுகிலோ சீனியும் தொகையாக வரும். மலருடைய வீட்டில் அவளது தேவைக்கு மேல் எந்தப் பொருளும் இல்லை. அவளுடைய பிள்ளைகள் திருமணமாகி தனியாக போய்விட்டார்கள். தாயை தம்மோடு வந்திருக்கும்படி ஒவ்வொரு பிள்ளைகளும் வலிந்து அழைத்திருந்தார்கள். அவர்களுக்கு அவள் சொன்ன பதில் எனக்கு இயலாமைவந்தா நான் நடமாடமுடியாமல் போனால் வருவேன். இப்போது வேண்டாம். என்றுவிட்டாள். எங்கே நீங்கள் யாராவது போய் அவளிடம் கேளுங்கள் சொல்வாள்.



“ ஏடி இது என்ர அடுப்பில ஓர பேணி அரிசி போட்டா சோறு. கால்கிலோ மீன் வாங்கினன், ஓர்துண்டு பொரிச்சன்’, ஒருதுண்டு சொதியில. மற்றது குழம்பு. எனக்கு பசி வந்தா நான் சாப்பிடு வன் இதைவிட்டிட்டு. அங்க போய் மருமோள் எப்ப அடுப்பால இறக்குவாள். மோன் எப்பவந்து சாப்பிடுவான் அதுக்குப்பிறகுதானே நான் சாப்பிடலாம். அவயட பெட்டிசட்டி திறக்கிறவரை நான் ஏன் காத்திருக்க வேணும். “இந்தா தேத்தண்ணி குடி” என்று எனக்கும் ஒரு தேநீர் கொடுத்தாள். பொருளாதார தன்னிறைவு இது போலத்தான். “தனக்கு தானே தலைவர். “



தழிழ்க்கவி
சாகித்திய எழுத்தாளர்

# சுற்றுலா துறையின் மீட்சி மற்றும் வளர்ச்சி

## இலங்கையின் பொருளாதாரத்திற்கான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

"Tourism Recovery: Challenges and Opportunities for Sri Lanka's Economy"

- கோவிட்–19க்குப் பிந்தைய மற்றும் தற்போதைய பொருளாதார மீட்சிக் கட்டத்தின் போது வெளிநாட்டுச் செலாவணி வருவாயை அதிகரிக்க சுற்றுலாத் துறையின் திறனை ஆராய்தல்.
- உலகளாவிய பயணத்திற்கான நிலையான சுற்றுலா நடைமுறைகள் மற்றும் சந்தைப்படுத்தல் உத்திகளைப் பற்றி முறையான கொள்கை அமுலாக்கம்.

மேன்மையான நிலப்பரப்புகளுக்கும், வளமான கலாச்சார பாரம்பரியத்திற்கும், அன்பான விருந்தோம்பலுக்கும் புகழ்பெற்ற இலங்கை, நீண்ட காலமாக உலகளாவிய பயணிகளுக்கு விருப்பமான இடமாக இருந்து வருகின்றது. இருப்பினும், நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய தூண்களில் ஒன்றான சுற்றுலாத் துறைக்கு *COVID-19* தொற்றுநோய் கடுமையான அடியைக் கொடுத்தது. நாடு பொருளாதார மீட்சிக்கான பாதையில் இறங்கும்போது, சுற்றுலாத் துறையின் மறுமலர்ச்சியானது அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிப்பதற்கும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும், நிலையான வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் குறிப்பிடத்தக்க வாய்ப்பை அளிக்கின்றது. எவ்வாறாயினும், இதை அடைவதற்கு, கணிசமான சவால்களை சமாளிப்பது மற்றும் உலகளாவிய ரீதியில் புதுமையான உத்திகளைப் பயன்படுத்துதல் தேவைப்படுகின்றது.

### இலங்கையின் பொருளாதார மீட்சியில் சுற்றுலாவின் பங்கு

சுற்றுலாத்துறையானது வரலாற்று ரீதியாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கிய பங்களிப்பாளராக உள்ளது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் *12%* பங்களிப்பதோடு மில்லியன் கணக்கானவர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை வழங்குகின்றது. இந்தத் துறையானது அந்நியச் செலாவணியின் முக்கிய ஆதாரமாகவும் செயல்படுகின்றது, இது நாட்டின் கொடுப்பனவு சமநிலை சவால்களை எதிர் கொள்வதற்கு இன்றியமையாதது. கோவிட்-19க்கு பிந்தைய, சுற்றுலாத்துறை மீட்சியானது பொருளாதார நடவடிக்கைகளை புத்துயிர் பெறுவதற்கும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் முக்கியமானது.

### 1. அந்நிய செலாவணி வருவாய்

சர்வதேச பயணங்கள் மீண்டும் தொடங்குவதால், இலங்கையின் அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தணிக்க சுற்றுலா உதவும். தங்குமிடம், போக்குவரத்து, உணவு மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றில் செலவழிக்கும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து வரும் வரவுகள் வெளிநாட்டு இருப்புக்களை அதிகரிக்கவும் நாணயத்தை உறுதிப்படுத்தவும் முடியும்.

### 2. வேலைவாய்ப்பு உருவாக்கம்

சுற்றுலா இயல்பிலேயே உழைப்பு மிகுந்தது, ஹோட்டல் ஊழியர்கள் மற்றும் சுற்றுலா நடத்துபவர்கள் முதல் உள்ளூர் பொருட்களை வழங்கும் கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகள்

வரை பரந்த அளவிலான வேலைகளை உருவாக்கு கின்றது. இத்துறையை, குறிப்பாக சுற்றுலாவை பெரிதும் நம்பியுள்ள பகுதிகளில் புத்துயிர் அளிப்பதன் மூலம் தொழிலாளர்களின் குறிப்பிடத்தக்க பகுதியை உள்வாங்க முடியும்.

### 3. பொருளாதாரப் பெருக்கிகள்

சுற்றுலாவின் தாக்கம் நேரடி வருவாயைத் தாண்டி, கட்டுமானம், சில்லறை வணிகம் மற்றும் விவசாயம் போன்ற துணைத் துறைகளில் வளர்ச் சியை உண்டாக்குகின்றது. ஒரு செழிப்பான சுற்றுலாத் தொழில் உள்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டில் முதலீட்டைத் தூண்டுகின்றது.

## சுற்றுலா மீட்சி எதிர்கொள்ளும் சவால்கள்

சாத்தியம் அபரிமிதமாக இருந்தாலும், இலங் கையில் சுற்றுலாத் துறையானது நிலையான மீட்சியை அடைவதற்கு பல தடைகளை எதிர்நோக்கியுள்ளது.

### 1. கோவிட்-19 பின்விளைவு

தொற்றுநோய் உலகளாவிய பயண முறைகளை சீர்குலைத்தது, பயணிகள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கு முன்னுரிமை அளித்தனர். சர்வதேச சுற்றுலாப் பயணிகளிடையே நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவது ஒரு முக்கிய சவாலாக உள்ளது, கடுமையான சுகாதார நெறிமுறைகள் மற்றும் பயனுள்ள தகவல் தொடர்பு தேவைப்படுகின்றது.

### 2. பொருளாதார ஸ்திரமின்மை

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, பணவீக்கம், நாணயத் தேய்மானம் மற்றும் எரிசக்தி பற்றாக்குறை ஆகியவற்றால் குறிக்கப்பட்ட சுற்றுலா சேவைகளின் தரத்தை பாதித்துள்ளது. பிரீமியம் இலக்காக நாட்டின் நற்பெயரைப் பேணுவதற்கு நிதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் நிலையான சேவைத் தரங்களை உறுதி செய்வது மிகவும் முக்கியமானது.

### 3. உட்கட்டமைப்பு இடைவெளிகள்

போதிய போக்குவரத்து இணைப்பின்மை, காலாவதியான வசதிகள் மற்றும் சீரற்ற பிராந்திய வளர்ச்சி ஆகியவை சுற்றுலா வளர்ச்சியைத் தடுக் கின்றன. விவேகமான பயணிகளின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய உட்கட்டமைப்பை மேம்படுத்துவது அவசியம்.

### 4. சுற்றுச்சூழல் கவலைகள்

கட்டுப்பாடற்ற சுற்றுலா இலங்கையின் இயற்கைச் சொத்துக்களை அச்சுறுத்தும் வகையில் சுற்றுச்சூழல் சீரழிவுக்கு வழிவகுக்கும். சுற்றுச்சூழல் நிலைத்தன்மையுடன் பொருளாதார நன்மைகளை



சமநிலைப்படுத்துவது ஒரு அழுத்தமான பிரச்சினை யாக எழுந்துள்ளது.

### 5. புவிசார் அரசியல் மற்றும் போட்டி அழுத்தங்கள்

ஏனைய தெற்காசிய நாடுகளின் போட்டி, புவிசார் அரசியல் பதட்டங்களுடன் இணைந்து, சுற்றுலாத்துறைக்கு சொர்காபுரியாக காணப்படுகின்ற இலங்கை நாட்டினை உலகின் முதன்மை சுற்று லாவிற்கு விருப்பமான பயண இடமாக நிலைநிறுத்து வதில் சவால்களை முன்வைக்கின்றது.

## நிலையான சுற்றுலா வளர்ச்சிக்கான வாய்ப் புகள் மற்றும் உத்திகள்

சுற்றுலாவின் முழுத் திறனையும் உணர, இலங்கை புதுமையான உத்திகளைக் கடைப்பிடிக்க வேண்டும் மற்றும் உலகளாவிய பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் அதன் தனித்துவமான சலுகை களைப் பயன்படுத்தி, நிலைத்தன்மைக்கு முன்னு ரிமை அளிக்க வேண்டும்.

### 1. நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல்

சுற்றுலா மீட்பு முயற்சிகளின் மையத்தில் நிலைத்தன்மை இருக்க வேண்டும். இங்கே பின்வரு வன முக்கிய முயற்சிகள் அடங்குவதாக இருக்க வேண்டும்:

- சுற்றுச்சூழல் சுற்றுலா: வனவிலங்கு சவாரிகள், பறவைகள் கண்காணிப்பு மற்றும் இயற்கைப் பாதைகள் மற்றும் இயற்கை எழில் போன்ற அனுபவங்களை ஊக்குவிக்கவும், அவை முக்கிய பயணிகளை ஈர்க்கும் அதே வேளையில் பல்லுயிர் களைப் பாதுகாக்கின்றன.

- கலாச்சார பாதுகாப்பு: இலங்கையின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்கள், பாரம்பரிய திருவிழாக்கள் மற்றும் உள்ளூர் கைவினைப்பொருட்கள் இலங்கையின் வளமான கலாச்சார பாரம்

பரியத்தை காட்சிப்படுத்துவதோடு, சமூக ஈடுபாடு மற்றும் நன்மையை உறுதி செய்தல்.

- பசுமை நடைமுறைகள்: ஆற்றல்-திறனுள்ள தொழில்நுட்பங்கள், கழிவுகளை குறைக்கும் நடைமுறைகள் மற்றும் கார்பன் உமிழ்வைக் குறைக்கும் மற்றும் காலநிலை மாற்றத்தைத் தணிக்க உதவும் முன்முயற்சிகளை பின்பற்ற ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா நடத்துபவர்களை ஊக்குவித்தல்.

- சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் சுற்றுலா
  * பசுமை அங்கீகாரம்: சுற்றுலாத் துறையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த *'Green Certification'* வழங்குதல்.
  * சுற்றுலாப் பயணிகளிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு *(Eco-friendly tourism awareness programs).*

- சிறப்பு சுற்றுலா *(Niche Tourism)*:
  * மருத்துவ சுற்றுலா: இலங்கையின் ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவ முறைகளை உலகளாவிய பயணிகளுக்காக பிரபலப் படுத்துதல்.
  * ஆன்மீக சுற்றுலா: புகழ்பெற்ற பௌத்த, இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ யாத்திரைத் தளங்களை உலகளாவிய பயணிகளுக்கு ஊக்குவித்தல்.
  * அதிரடி மற்றும் சாகச சுற்றுலா: டைவிங், சர்பிங், வனவிலங்கு பார்க்கிங், மலைப் போக்குவரத்து போன்ற பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புகள்.

**2. இலக்கு சந்தைப்படுத்தல் மற்றும் உலகளாவிய பார்வையாளர்களுக்கு விரிவுபடுத்தல்**

உலக சந்தையில் போட்டியிடுவதற்கு இலங்கையின் சுற்றுலா வர்த்தக நாமத்தை புத்துயிர் பெறச்செய்வது அவசியமாகும். முக்கியமாக பின்வரும் உத்திகள் அடங்கும்:

- டிஜிட்டல் பரிவர்த்தனை மற்றும் மின்னணு சந்தைப்படுத்தல்: ஆன்லைன் முன்பதிவு வசதிகள், *AI* சார்ந்த பயண ஆலோசனைகள் போன்ற தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்தல். நாட்டின் ஈர்ப்புகளை வெளிப்படுத்த சமூக ஊடகங்கள், செல்வாக்கு செலுத்தும் சந்தைப்படுத்தல் மற்றும் *virtual reality* சுற்றுப்பயணங்களைப் பயன் படுத்துதல்.



- மாறுபட்ட சந்தைகள்: பாரம்பரிய சந்தைகளை (ஐரோப்பா, இந்தியா) தாண்டி சீனா, மத்திய கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா போன்ற வளர்ந்து வரும் சந்தைகளை குறிவைத்து விரிவாக்கம் செய்தல் மிகவும் அவசியம்.

- அனுபவ சுற்றுலா: வளர்ச்சியடைந்து வரும் பயணிகளின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் முகமாக உடல்நலம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் ஒரு பயணமாக உடல், உளவியல் அல்லது ஆன் மீக ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கை களிலும், சமையல் அனுபவங்கள் மற்றும் சாகச சுற்றுலா ஆகியவற்றில் கவனம் செலுத்தும் தொகுப்புகளை உருவாக்குதல்.

**3. பொது-தனியார் கூட்டாண்மைகள்** *(PPPs)*

அரசு மற்றும் தனியார் துறை இடையேயான ஒத்துழைப்போடு சுற்றுலா உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில் முதலீடு செய்ய முடியும். முன்முயற்சி களில் பின்வருவன அடங்கும்:

- உலகத்தரம் வாய்ந்த விமான நிலையங்கள், சாலைகள் மற்றும் தங்கும் வசதிகளை உரு வாக்குதல்.
- சுற்றுலாப் பணியாளர்களின் திறன்களை மேம் படுத்த பயிற்சித் திட்டங்களை நிறுவுதல்.
- ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட சுற்றுலா தொடர் செயல்பாட்டு மதிப்பு சங்கிலியில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு *(SMEs)* ஊக்கத்தொகையை உருவாக்குதல்.
- அந்தஸ்து மிக்க சர்வதேச ஹோட்டல் நிறுவனங் களை ஈர்த்தல்.
- பயணத்துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்க கூட்டு பயிற்சி திட்டங்கள்.

**4.சுற்றுலா வளர்ச்சியில் அரசு நடவடிக்கைகள்**

- நிதியுதவி மற்றும் கடன் திட்டங்கள்:
  * சிறு மற்றும் நடுத்தர *(SME)* சுற்றுலா நிறுவனங்களுக்கு மானியக் கடன்கள் வழங்குதல்.
- விசா சலுகைகள்:
  * இலங்கை வருகை செலுத்தும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச/குறைந்த கட்டண விசா.

**5. சமூகம் சார்ந்த சுற்றுலா**

சுற்றுலாவில் பங்கேற்க உள்ளூர் சமூகங் களுக்கு அதிகாரமளிப்பது அனைவரையும் உள் ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும். தங்கும் விடுதிகள் (ஹோம்ஸ்டேகள்), உள்ளூர் உணவுப் பயணங்கள் மற்றும் சமூகம் சார்ந்த அனுபவங்களை ஊக்குவிப்பது சுற்றுலா வருவாயின் சமமான விநியோகத்தை உறுதி செய்கின்றது.

**6. நெருக்கடி மேலாண்மை மற்றும் பின்னடைவு**

எதிர்காலத்தில் ஏற்படும் இடையூறுகளுக்கு மீள்தன்மையை உருவாக்குவது நீண்ட கால நிலைத் தன்மைக்கு முக்கியமானது. இதில் பின்வருவன அடங்கும்:

- வீழ்ச்சியின் போது சுற்றுலா துறையை ஆதரிக்க அவசர நிதியை நிறுவுதல்.
- ஒரே சந்தையை சார்ந்திருப்பதை குறைக்க சுற்றுலா சலுகைகளை பன்முகப்படுத்துதல்.
- தரவு சார்ந்த முடிவெடுப்பதன் மூலம் இலக்கு நிர்வாகத்தை வலுப்படுத்துதல்.

சுற்றுலா துறையின் பாரிய வளர்ச்சி மற்றும் அதன் பன்முகப்படுத்தப்பட்ட பங்களிப்பு இலங்கையின் பொருளாதார நிலப்பரப்பை மாற்றும் தன்மையை கொண்டுள்ளது, ஆனால் இதை அடைவதற்கு அனைத்து பங்குதாரர்களிடமிருந்தும் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகின்றது. கொள்கை வகுப்பாளர்கள் உட்கட்டமைப்பில் முதலீட்டுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும், ஒழுங்குமுறைகளைஒழுங்குபடுத்தவேண்டும்மற்றும் தனியார் துறை பங்கேற்பிற்கான சூழலை வளர்க்க வேண்டும். தொழில்துறை வல்லுநர்கள் புதுமை மற்றும் நிலைத்தன்மையைத் தழுவ வேண்டும், போட்டித்தன்மையுடன் இருக்க உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இணைந்திருக்க வேண்டும். அதன் இணையற்ற இயற்கை மற்றும் கலாச்சார செல்வத்தை மூலதனமாக்குவதன் மூலம், பொறுப்பு வாய்ந்த சுற்றுலாத்துறைக்கான முதன்மையான இடமாக இலங்கை தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். மீட்சிக்கான பயணம் சவாலானதாக இருக்கலாம், ஆனால் மூலோபாய திட்டமிடல் மற்றும் கூட்டு நடவடிக்கை மூலம், சுற்றுலாத் துறை வலுவாக உருவாகி, பொருளாதார மறுமலர்ச்சியை உந்தி, தேசத்திற்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குகின்றது.



AGS. சுவாமிநாதன் சர்மா
MBA (UK), FCA (SL), FCMA (UK),FCPA (Aust.)
நிர்வாக இயக்குனர் @ A. G. Sarma & Co., (CA)
பட்டயக்கணக்காளர் , வரி மற்றும் முகாமைத்துவ ஆலோசகர்

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

# வடக்கின் வரவு-செலவு வினைத்திறனான நிதித்திட்டம்

வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வினைத்திறனாகவும், ஒருங்கிணைந்தும், விரைவாகவும் செலவு செய்வது தொடர்பாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் சம்பந்தப்பட வேண்டிய சில அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார் .

வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்ட நிதியை செலவு செய்வதில் உள்ள பிரச் சினைகள், முன்னுரிமைகள் தொடர்பிலும் கலந் துரையாடப்பட்டன. முக்கியமாக அரசாங் கத்துக்கு முன்வைக்க வேண்டிய மேலதிக திட்ட முன்மொழிவு கள், வடக்கின் தேவைப்பாடுகள் தொடர் பாகவும் ஆராயப்பட்டு,அவை அரசின் பார்வைக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதியை செலவழிப்பதற்கான கால அவகாசம் 6 மாதங்கள்தான் உள்ளன. வினைத் திறனாகவும் உரிய காலத்துக்குள்ளும் செலவு செய்து முடிக்கவேண்டும். எமது மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பியதாக இருக்கக் கூடாது என்பது போன்ற பல காத்திரமான விடயங்கள் இந்த கலந்துரையாடலில் முன் வைக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது.

வரவு செலவுத் திட்டத்தின் செயலாற் றுகையில் கடந்த காலங்களில் நடைபெற்ற இழுத் தடிப்புகள் கையூட்டுக்கள், ஊழல்கள் என்று கண்ணுக்கு முன்னாலே பல நடைபெற்று வந்த போதும் கண்டும் காணாதது போல நடந்து சென்றதைப் போல அல்லாமல் ஒரு மாற்றம் வர வேண்டும் என்பது மக்களுடைய பெருத்த அவாவினை ஏற்படுத்தி இருக்கின்றது.

மக்களது எதிர்பார்ப்புக்கு ஏற்ப வடக்கின் தற்போதைய கௌரவ ஆளுநர் அவர்கள் எடுத்தி ருக்கும் முடிவுகள் பலருக்கும் திருப்தியையும் பெருத்த எதிர்பார்ப்பையும் உண்டு பண்ணி இருக்கிறது. ஆனால் இன்னும் பலருக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும் சம்பவமாகவே இவைகள் அமைந்திருக்கும் என்று தெரிகிறது.எனவே மாற்றங்கள் மலரும் என்று நம்பிக்கையோடு காத்திருப்போம்.



# கோடையை குளிர்விக்கும் வத்தகையை நாங்களும் பயிரிடலாம்

**இலங்கையில் வத்தகைப்பழம் என்றும் இந்தியாவில் தர்ப்பூசணி என்றும் பரவலாக அறியப்படும் இப்பழம் கோடைகாலத்தில் சாப்பிடுவதற்கு மிகவும் சிறந்த ஒரு பழம் என்பதைப் பலரும் அனுபவபூர்வமாக அறிந்துவைத்துள்ளார்கள்.**

ஒரு தர்ப்பூசணியைச் சாப்பிட்டுப்பார்த்தால் தேவதைகள் என்ன சாப்பிடுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்" என்று சொன்னாராம் மார்க் டுவைன் (Mark Twain) என்னும் புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர். இனிமையான தர்ப்பூசணிப்பழத்தின் மூதாதையர் மிகுந்த கைப்புச் சுவையும் வெளிர் பச்சைநிறச் சதையும் உடைய பேய்க்கொம்மட்டியை ஒத்திருந்தார்கள் என்பதுதான் ஆச்சரியம். நாலாயிரம் ஆண்டுகளாகத் தெரிவு இனப்பெருக்கம் (selective breeding) மூலம் பேணப்பட்ட தர்ப்பூசணி இனங்கள் பல்வேறு நாடுகள் மற்றும் கலாச்சாரங்களில் பரவி, இனிப்புச் சுவையும் சிவப்புச் சதையும் கொண்ட இன்றைய தர்ப்பூசணி பிறக்க வழிவகுத்தன.

மற்றைய பழங்களைப் போலல்லாமல் குளிர்ந்த, நிழலான இடத்தில் வைத்திருந்தால், தர்ப்பூசணி வாரங்கள் அல்லது மாதங்கள் கழித்துக்கூட உண்ணக் கூடியதாக இருக்கும். சூடான் போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் வரண்ட காலங்களில் பயன்படுவதற்காகத் தர்ப்பூசணிப்பழங்கள் சேகரிக்கப்பட்டு சேமித்து

வைக்கப்படுகின்றன. இதே காரணத்திற்காக எகிப்தியர்களும் இப்பழத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். பண்டைய எகிப்தியரின் நம்பிக்கையின்படி அவர்களது மன்னர்கள் இறந்தபோது அவர்களுக்கு நீண்ட பயணம் இருந்தது. மன்னர்களின் அந்தப்பயணத்தில் அவர்களுக்கு நீர் ஆதாரம் வழுங்கக்கூடியது இந்தத் தர்ப்பூசணிப் பழம்தான் என்பது அவர்களது நம்பிக்கை. எகிப்திய அரசன் தூத்தன்காமனது (Tutankhamun) கல்லறை உட்பட 4,000 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட எகிப்திய பிரமிட்டுகளில் தர்ப்பூசணியின் விதைகள் மற்றும் ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இஸ்ரேலில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் தோட்டக்கலை நிபுணரான ஹாரி பாரிஸ் (Harry Paris), தர்ப்பூசணியின் தோற்றம் மற்றும் பரவல் பற்றிய தடயங்களை பல ஆண்டுகளாக சேகரித்து வருகிறார். சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்தியர்கள் தர்ப்பூசணிப் பயிர்களை வளர்க்கத் தொடங்கினர் என்பதற்கான ஆதாரங்களை அவர் கண்டறிந்துள்ளார். எகிப்தியர்கள் தர்ப்பூசணி இனங்களைப் பயிரிடத் தொடங்கியவுடன், அப்பயிரில் அவர்கள் மாற்ற முயன்ற முதல் பண்பு அவற்றின் சுவை என்று சந்தேகிக்கிறார் பாரிஸ். பண்டைய தர்ப்பூசணியின் கைப்புச்சுவைக்குக் காரணமாக இருந்தது ஒரு மரபணு (gene) மட்டுமே. இதனால் தர்ப்பூசணிக் கூட்டத்தில் இருந்து இனிப்புச் சுவை கூடிய இனங்களைத் தேர்வு செய்து கலப்பினங்களைத் தோற்றுவிப்பது அவ்வளவு கடினமாக இருந்திருக்காது என்கிறார் பாரிஸ்.

தர்ப்பூசணியின் சர்க்கரை உள்ளடக்கத்தை தீர்மானிக்கும் மரபணுவுடன் சிவப்பு நிறத்திற்கான மரபணுவும் இணைக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக தெரிவுக் கலப்பினப் பயிர்ச்செய்கை வழியாக இனிப்புச்சுவையுடன் கூடவே தர்ப்பூசணியின் சதையின் நிறமும் செந்நிறமாக மாறத்தொடங்கியது. இவ்வாறு மிக நீண்டகாலமாக சுவையின் பொருட்டும் வடிவத்தின் பொருட்டும் தெரிவு செய்யப்பட்டு வந்துசேர்ந்ததுதான் இனிப்புச்சுவையும் மென்மையான சிவப்பு நிறச் சதையும் கொண்ட இன்றைய வத்தகைப் பழம்.

*கோடைக் காலத்தில் பழங்களுக்கு அதிக தேவை இருக்கும். குறிப்பாக தர்ப்பூசணி, முலாம்பழம், எலுமிச்சை, திராட்சை போன்ற பழங்களின் தேவை சராசரி நுகர்வைவிட அதிகளவில் இருக்கும். இக்காலங்களில் அறுவடைக்கு வரும் பழங்கள் சந்தைகளில் அதிக வருவாயைத் தரும். தர்ப்பூசணி அதிக அளவிலான பாதுகாப்புகளை கொண்டிராத பயிர் என்பதால் விவசாயக் குடும்பத்து பெண்கள் கூட தனியாகவே*




*இப்பயிரை விதைக்க முன் வருவார்கள். தற்போது பிப்ரவரி மாதத்தில், இதை விதைத்தால் மே, ஜூன் மாதங்களில் அறுவடை செய்து அதிக வருவாயைப் பார்க்கலாம்.*

### மண், தட்பவெப்பநிலை

மணல் கலந்த நிலம் மிகவும் உகந்தது. அதிக வெப்பத்துடன் காற்றில் ஈரத்தன்மை, நல்ல சூரிய வெளிச்சத்துடனும் உள்ள தட்பவெப்பநிலை பயிர் செய்ய ஏற்றது. குறைந்த வெப்பநிலையில் விதைகள் முளைப்பது குறைவாக இருக்கும். காய்கள் முதிர்ச்சி அடையும் பருவத்தில் அதிக வெப்பநிலை நிலவுவது பழங்களில் இனிப்புத் தன்மையை அதிகரிக்கும். பனி பெய்தால் பயிரின் வளர்ச்சி தடைபடும்.

### பருவம்

தை, மாசி மாதங்களில் விதைக்கப்படும் பயிர் கோடைக் காலத்தில் அறுவடை செய்யப்படும். கோடைக் காலத்தில் பழங்களுக்கு அதிக விலை கிடைக்கிறது. இதைத் தவிர ஜூன், ஜூலை மாதங்களிலும் விதைப்பு செய்யலாம்.

### நிலம் தயாரித்தல்

நிலத்தை 3, 4 முறை நன்றாக உழவு செய்ய வேண்டும். கடைசி உழவின்போது ஹெக்டேருக்கு 30 டன் மக்கிய தொழு உரமிட்டு மண்ணுடன் கலக்கச் செய்ய வேண்டும். பின்பு 2 மீட்டர் இடைவெளியில் 60 செ.மீ. அகலமுள்ள வாய்க்கால்களை அமைத்திட வேண்டும். இந்த வாய்க்கால்களின் உள்புறம் 1 மீட்டர் இடைவெளியில் 45 * 45 * 45 செ.மீ நீள, அகல, ஆழ அளவில் குழிகள் தோண்ட வேண்டும். இக்குழிகளில் சம அளவு மேல் மண், தொழு உரம் ஆகியவற்றுடன் ரசாயன உரங்களைக் கலந்து இட வேண்டும்.

### உரப் பாசனம்

தர்ப்பூசணி பழத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு தழை, மணி, சாம்பல் சத்து முறையே 200:100:100 கிலோ. இந்த அளவைப் பிரித்து பயிரின் காலம் முழுவதும் அளிக்க வேண்டும். விதையும், விதைப்பும்: ஒரு ஹெக்டேருக்கு விதைக்க சுமார் 3, 4 கிலோ அளவு விதை தேவை. குழி ஒன்றுக்கு 4, 5 விதைகளை தூவி பின்னர் முளைத்து வந்தவுடன் குழிக்கு 3 செடிகள் இருக்குமாறு கலைத்து விட வேண்டும்.

### நீர் நிர்வாகம்

பருவ மழைக் காலங்களில் மானாவாரியாகப் பயிர் செய்யலாம். கோடைக் காலத்துக்கு அறுவடை செய்யப்படும் பயிரை பாசனப் பயிராகப் பயிர் செய்யலாம். மானாவாரியில் மழை வந்தவுடன் குழிகள் தோண்டி விதைப்பு செய்ய வேண்டும். இரைவையில் விதைப்பதற்கு முன்னர் குழிகளில் நீர் ஊற்றிப் பின்னர் 7,10 நாள்களுக்கு ஒரு முறையும் நீர் ஊற்ற வேண்டும். விதைகள் முளைத்து வந்த பின்னரே வாய்க்கால்கள் மூலம் நீர் பாய்ச்சுதல் வேண்டும். நீர் பாய்ச்சுதலை ஒரே சீரான இடைவெளியில் செய்ய வேண்டும் (சுமார் 10 நாள்களுக்கு ஒரு முறை) அதிக நாள்கள் நீர் பாய்ச்சாமல் மண்ணின் ஈரத்தன்மை மிகக் குறைவான நிலைக்குப் போன பின்னர் திடீரென்று நீர் பாய்ச்சினால் காய்கள் வெடித்து விடும். இவ்வாறு வெடித்த காய்கள் விற்பனையில் விலை குறைந்து போக ஏதுவாகும்.

### களை கட்டுப்பாடு, பின்செய் நேர்த்தி

விதைத்த 15, 30-ஆம் நாள்களில் களைக்கொத்து கொண்டு களை நீக்கம் செய்ய வேண்டும். விதைத்த 15-ஆம் நாள் (பயிர் 2 இலைகளுடன் இருக்கும்போது) டிபா என்ற பயிர் ஊக்கியை 25.50 பி.பி.எம் என்ற அளவில் கரைத்துத் தெளிக்க வேண்டும் (25, 50 மில்லி கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது 250 மி. கிராம், 500 மி.கிராம் 10 லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் கலக்க வேண்டும்) மீண்டும் ஒரு வாரம் கழித்து இதே அளவில் கலந்து ஒரு முறை தெளிக்க வேண்டும்.

இதற்குப் பதிலாக எத்ரல் பயிர் ஊக்கியை கீழ்க்கண்ட தருணத்தில் 4 முறை தெளிக்கலாம். (2





மி.லி. மருந்து 10 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து) முதல் இரண்டு இலைப் பருவம், ஒரு வாரம் கழித்து, மேலும் ஒரு வாரம் கழித்து, மீண்டும் ஒரு வாரம் கழித்து என 4 முறை தெளிக்க வேண்டும். கொடிகள் படர ஆரம்பித்தவுடன் வாய்க்கால்களிலிருந்து எடுத்து இடைப்பகுதியில் படரச் செய்ய வேண்டும்.

விதைத்த 30-ஆம் நாள் ஹெக்டேருக்கு 30 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இட்டு நீர்ப் பாய்ச்ச வேண்டும். இதற்கு குழி ஒன்றுக்கு 13 கிராம் யூரியா இட வேண்டும். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு: பயிர்களைத் தாக்கும் வண்டுகளைக் கட்டுப்படுத்த நனையும் செவின் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். பயிர்களை சாம்பல் நோய் தாக்கினால் அதை கட்டுப்படுத்த நனையும் கந்தகத்தை ஒரு லிட்டர் தண்ணீரை 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். தர்ப்பூசணியை பழ ஈக்கள் தாக்கலாம். இதனைக் கட்டுப்படுத்த மாலத்தியான் மருந்தினை உபயோகப்படுத்தலாம்.

### அறுவடை

பழங்கள் முற்றி பழுத்தவுடன் அறுவடை செய்ய வேண்டும். அறுவடைக்கான அறிகுறி என்பது பழத்தை தொட்டுப் பார்த்தால் மட்டுமே தெரியும். நன்கு முற்றிப் பழுத்த பழத்தை விரலால் தட்டிப் பார்க்கும்போது ஒரு மந்தமான ஒலி உண்டாகும். பழம் தரையைத் தொட்டுக் கொண்டிருக்கும் பகுதியில் பசுமை நிறம் மாறி மஞ்சள் அல்லது வெளிர் மஞ்சள் நிறமடையும். பழங்களைக் கையில் எடுத்து அழுத்தம் கொடுக்கும்போது அப்பகுதி எளிதில் உடைந்து நொறுங்கும். சாதாரணமாக மலர் விரிந்து மகரந்தச் சேர்க்கை நடந்து சுமார் 30 முதல் 40 நாள்களில் பழங்கள் அறுவடைக்குத் தயாராகும். இலங்கையில் அதிகமாக விளையக்கூடிய வர்த்தகை பயிர் செய்கையை நாங்களும் செய்வோம்.

# இலங்கை தேயிலையின் வரலாறு



தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் சம்பளத்தை கொஞ்சம் கூட்டிக்கொடு என்று கேட்டால் மாத்திரம் அவர்களின் மூக்குநுனி உடனேயே வேர்த்து விடுகின்றது. இலங்கையின் தேநீருக்கு இன்று உலகமே அடிமைப்பட்டு கிடக்கின்றது. அந்த தேயிலையை பொய்யும் விரல்களில் இன்னும் ரத்தக்கறைகள் தான் மிஞ்சிக்கிடக்கிறது.



The first known photograph of James Taylor

“உலகிலேயே மிகச்சிறந்த தேயிலை இலங்கைத் தேயிலை” என்ற பெயரைப் பெற்றுக்கொள்ள ஜேம்ஸ் டெய்லரின் பங்களிப்பும், உழைப்பும் மிகவும் மகத்தானது. ஆனாலும் இந்த நிலையை அடைவதற்கு மிகப் பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதாக இருந்தது. அதற்குக் காரணம் இலங்கைத் தேயிலைக்கு முன்னதாகவே சீன, இந்தியத் தேயிலைகள் உலக சந்தையை மிக வலுவாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தமையாகும். இதன் காரணமாக, ‘இலங்கைத் தேயிலை மிகச் சிறந்த தரத்தில் ஆனது’ என்ற தகுதியை வைத்து அது உலக சந்தையை வெற்றி கொள்ள வேண்டியதாக இருந்தது.

மிகக்குறுகிய காலத்திலேயே இலங்கையில் தேயிலை உற்பத்தித்துறை பன்மடங்கு வளர்ச்சி கண்டது. பல தேயிலைத் தோட்ட துரைமார்கள் ஜேம்ஸ் டெய்லரின் உற்பத்தி முறையைப் பின்பற்றலாயினர். 1882 ஆம் ஆண்டு 20 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு 7 லட்சம் இறாத்தல் மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை பின்னர் 1886ஆம் ஆண்டு சுமார் நான்கு வருடங்களிலேயே 900 தோட்டங்களில் செய்கை பண்ணப்படுமளவுக்கு விஸ்வரூபமெடுத்தது. 1907ஆம் ஆண்டில் 3 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட 170 மில்லியன் இறாத்தல் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வாண்டில் 16 ஆயிரம் தேயிலைத் தோட்டங்கள்

உருவாகி இருந்ததுடன் இவற்றில் 4 லட்சம் கூலித் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இதற்கான மொத்த முதலீடு 50 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்டாக அதிகரித்திருந்தது.






அக்காலத்தில் புகழ்பெற்ற ஊடகவியலாளராக இருந்த ஜோன் பெர்குசன் (John Ferguson) இது தொடர்பில் வியந்து குறிப்பிடு கையில் :- "வரலாற் றில் என்றும் இல்லாதபடி பாரியளவில் தேயிலையானது கோப்பி இருந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு ஆச்சரியப் படத்தக்க வகையில் அபிவிருத்தி அடைந்துள்ளது. அது, தான் இருக்கவேண்டிய எல்லை களையும் தாண்டி இலங்கை முழுவதிலும் வியாபித் துள்ளது" என்றார். இதனை அடுத்துவந்த மூன்று வருடங்களில் இங்கிலாந்தில் அபர்டீன் என்ற இடத்தில் இயங்கிய உலகின் புகழ்பெற்ற தேயிலை வர்த்தக நிறுவனமான 'வெஸ்ட்லேண்ட் சிலோன் டீ நிறுவனம்' (Westland Ceylon Tea Agency) உலகின் அனைத்து தேயிலை களிலும் இன்றைய சிறந்த தேயிலை இலங்கைத் தேயிலை தான் என்பதற்கு அங்கீகாரம் கிடைத்து விட்டது" எனப் பிரகடனப்படுத்தியது.

1885 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் தேயிலைக் கொள்வனவில், சீனத் தேயிலை 62 சதவீதத்தைத் தனது பங்காகக் கொண்டிருந்தது. இது 1895 ஆம் ஆண்டில் 14 சதவீதமாக குறைந்து போனது. இக்காலத்தில் பிரித்தானியா 35 சதவீதமான தேயிலையை இலங்கையிடம் இருந்து கொள்வனவு செய்தது. பிரிட்டனில் இவ்விதம் இலங்கைத் தேயிலையின் நுகர்வின் அதிகரிப்பும், ஏனைய நாடுகளில் உருவான தேயிலைக்கான அதிகரித்த கேள்வியும் இலங்கையில் தேயிலைப் பயிர்ச் செய்கைக்கான ஆர்வத்தை சடுதியாக அதிகரித்தன. இதனால் அழிந்து போய்க் கொண்டிருந்த கோப்பித் தோட்டக் காணிகளுக்கு திடீரென மவுசு அதிகரித்து, அவற்றை தேயிலை உற்பத்தியாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்கி, கோப்பிச் செடிகளை வேரோடு பிடுங்கி, அவை இருந்த இடத்தில் தேயிலைச் செடிகளை நாட்டினர். கோப்பிச் செடிகள் போலல்லாது தேயிலைச் செடிகள் அதி உயர் மலைப் பிரதேசங்களான 5000 அடி உயரப் பிரதேசங்களிலும் செழிப்பாக வளர்ந்தன. மத்திய மலைநாட்டின் மழை, வெயில், குளிர் கலந்த இதமான காலநிலை கோப்பியைவிட தேயிலைப் பயிர்ச்செய்கைக்கே மிக சாதகமாக அமைந்து இருந்தது.

இத்தகைய சாதகமான தன்மைக்கு மேலதிகமாக ஏற்கனவே கோப்பிப் பயிர்ச்செய்கைக்கென ஏற்படுத்தப்பட்டிருந்த உட்கட்டமைப்பு வசதிகளான பாதைகள், பெருந்தெருக்கள், ரயில்வே போக்குவரத்து, துரைமார் பங்களாக்கள், தொழிற்சாலைகள், நீர் வடிகால் அமைப்புகள் என்பன காரணமாக பாரிய முதலீடுகளுக்கு தேவை ஏற்படவில்லை. மேலும் தலைநகரின் கப்பல் துறைமுக அபிவிருத்தி, 1869 ஆம் ஆண்டு சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டமை, கப்பல் போக்குவரத்தில் நீராவிக்கப்பல் அறிமுகப் படுத்தப்பட்டமை என்பவை எல்லாம் சேர்ந்து ஐரோப்பிய நாடுகளுக கான தேயிலை ஏற்றுமதிக்கு மிக உயர்ந்த சக்தியாக அமைந்தன .இதன் காரணமாக தேயிலைச் சந்தையில் அசாம், சீனத் தேயிலை உற்பத்தியாளர் களின் ஆக்கிரமிப்பை இலங்கை முறிய டிக்கக் கூடியதாக இருந்தது.



இந்தியாவின் தென் மாநிலங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட மிகக் குறைந்த செலவிலான கூலித் தொழிலா ளர்கள் மற்றும் தேயிலைத் தூள்



இலங்கையின் தேயிலை கைத்தொழிலில் ஒரு முக்கிய பிரமுகரான புகழ் பெற்ற தோமஸ் லிப்டன் (1838 - 1931)

உற்பத்தி முற்றிலும் இயந்திர மயமாக்கப்பட்டமை, சீனப் பச்சைத் தேயிலையை விட இலங்கையின் கறுப்புத் தேயிலை விரும்பத்தக்க ருசி, மணம், குணம் என்பவற்றை கொண்டிருந்தமை போன்றனவும் இலங்கைத் தேயிலையின் வர்த்தகப் பெரு வெற்றிக்கு பாரிய பங்களிப்புச் செய்தன. இதற்கு மேலதிகமாக மிகத் துல்லியமாகத் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் உபாயங்களும் இந்த வெற்றியில் பங்காற்றின. இதன் பொருட்டு பல சர்வதேச சந்தைப்படுத்தல் உபாயங்கள் தெரிவு செய்யப்பட்டு விற்பனைக் கண்காட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. இத்தகைய கண்காட்சிகள் அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் (1880 - 1881), லண்டன் 1886, கிளாஸ்கோ 1888, நியூசிலாந்தின் டுனேடின் (Dunedin) 1889, பாரிஸ் 1889 ஆகிய நகரங்களில் இடம்பெற்றன.

1880 ஆம் ஆண்டு ஒக்ரோபர் தொடக்கம் 1881 ஏப்ரல் வரையில் மெல்பர்ன் நகரில் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சியில் சுமார் 15 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வின் போது லூல் கொந்தரா தோட்டத்தின் தேயிலை உற்பத்திகளும் அதன் தயாரிப்பாளரான ஜேம்ஸ் டெய்லரும் மிக உயர்வாக பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். ஜேம்ஸ் டெய்லரின் தேயிலை உற்பத்தி வகைகள் என வரிசைப்படுத்தப்பட்ட ஒரேஞ் பெக்கோ, பிலவரி (Flavery ) பெக்கோ, சச்கொங் பெக்கோ, புரோக்கன் பெக்கோ ஆகிய தேயிலைத் தூள் வகைகள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த எல்லாத் தேயிலைகளிலும் பார்க்க சிறந்ததென முதல்தர திறமை சான்றிதழ்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டன. கண்காட்சியின் முடிவில் இடம்பெற்ற மிகச் சிறந்த தேயிலை உற்பத்திக்கான விருது வழங்கும் விழாவில் போட்டிக்கு விண்ணப் பித்திருந்த 78 வகையான பிரிவுகளில் 36 வகை யான பிரிவுகளுக்கான முதல்தர திறமை விருது களை ஜேம்ஸ் டெய்லரின் உற்பத்திகள் பெற்றுக் கொண்டன. அந்த விருதுகளையும் சான்றிதழ்க ளையும் ஜேம்ஸ் டெய்லரின் சார்பில் லூல்கொந் தரா தோட்ட உரிமையாளர்கள் கெயார் மற்றும் டுண்டாஸ் (Keir and Dundas) அன்ட் கம்பெனி யினர் பெற்றுக்கொண்டனர். இந்தச் சம்பவம் தேயிலையையும் ஜேம்ஸ் டெய்லரையும் வாழ்நாள் முழுவதும் ஒன்றிலொன்று இரண்டறக் கலக்கச் செய்துவிட்டது. அந்தக் கண்காட்சியை தொடர்ந்து அவுஸ்திரேலியச் சந்தையில் இலங்கைத் தேயிலை யின் விற்பனை பன்மடங்கு அதிகரித்தது.

ஆரம்பத்தில் இரண்டு லட்சத்து 92 ஆயிரத்து 670 இறாத்தல்களாக இருந்த அவுஸ்திரேலியாவுக்கான தேயிலை ஏற்றுமதி, 1889 ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் 7 லட்சம் இறாத்தல்களாக அதிகரித்தது. இதேபோல லண்டனில் 1883 ஆம் ஆண்டும், 1886 ஆம் ஆண்டும் இரண்டு தேயிலை விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப் பட்டன. இவை இரண்டுமே மிகுந்த வெற்றியைத் தந்தன. இரண்டாவது கண்காட்சியில் 5.5 மில்லியன் மக்கள் கலந்து கொண்டிருந்தனர் என்றும் அங்கு இந்தியத் தேநீர் ஒரு கோப்பை விற்ற போது இலங்கை தேநீர் 3 கோப்பைகள் விற்பனையானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உலகெங் கும் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்காக சிலோன் டீ சிண்டிகேட் (Ceylon Tea Syndicate) மற்றும் தேயிலை நிதியம் (Tea Fund) ஆகிய அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன. 1886ஆம் ஆண்டு மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை நிகழ்த்தப்பட்ட கிளாஸ்கோ சர்வதேச கைத்தொழில், விஞ்ஞானம் மற்றும் கலைக் கண்காட்சியில் இலங்கைத் தேயிலை "தேநீர் இல்லம்" மற்றும் "இலங்கை மன்று" ஆகிய மண்டபங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.




அமுதன்
கீரிமலை



உள்ளூர்

# உற்பத்தியாளர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சம்மேளனம் வட பகுதி உற்பத்தியாளர்களின் பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றவகையில் அவர்களது பொருட்கள் சேவை களை விருத்தி செய்வதற்கு எவ்வாறான நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் உற்பத்தியாளர்களின் பொருட்களை ஏற்றுமதி சந்தைக்கு ஏற்ற தொடர்புகளை மேற்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பாகவும், இன்றைய தினம் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்குபடுத்தலில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

வடபகுதி உற்பத்தியாளர்களின் பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்குதற்கான கலந்துரையாடல் மேலதிக அரசாங்க அதிபர் அவர்கள் தலைமையில் இன்றைய தினம் (04.04.2025) காலை 09.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் அவர்கள், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்கு உள்ளூர் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் ஊடாக அபிவிருத்தியினை மேம்படுத்தலாம் எனவும், சம்மேளனத்தின் ஒத்து ழைப்பினை பெற்று சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு அமைந்துள்ளதாகவும், இச் செயற்பாடு வடக்கு தெற்கிற்கான வியாபார வகையாக அமைந்திருந்தாலும் ஒரு வகையில் நல்லிணக்கச் செயற்பாடாகவும் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டு, இன்றைய நிகழ்வினை உள்ளூர் உற்பத்தியாளர்கள் நல்ல சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சம்மேளனம் வட பகுதி உற்பத்தியாளர்களின் பொருட்கள் சேவைகளை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற






வகையில் அவர்களது பொருட்கள் சேவைகளை விருத்தி செய்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதும் உற்பத்தியாளர்களின் பொருட்களை ஏற்றுமதி சந்தைக்கு ஏற்ற தொடர்புகளை மேற்கொள்வது எவ்வாறு என்பது தொடர்பாகவும், இன்றைய தினம் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் ஒழுங்குபடுத்தலில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந் நிகழ்விற்கு கௌரவ ஆளுநர் செயலகம், வடமாகாண பிரதம பிரதமர் செயலாளர் அலுவலகம், போன்றவற்றின் வழிகாட்டலும் அந்தத் துறை சார்ந்த திணைக்களங்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டது.

இந் நிகழ்வில் கைத்தொழில் அபிவிருத்தி சபை மாகாண பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சம்மேளனத்தின் நிறைவேற்று அதிகாரி, தலைவர் மற்றும் சம்மேளன அங்கத்தவர்கள், தொழிற்துறை மாகாண பணிப்பாளர், கிராமிய அபிவிருத்தி மற்றும் துறை சார்ந்த திணைக்கள தலைவர்கள், வடபகுதி சம்மேளனத் தலைவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர் என யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஊடகப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

### உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**